செ.வெ.எண்.11/2017 நாள்:05.09.2017

## சிவகங்கை மாவட்டம்

## கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு செய்தார்.



சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியம் அனுமந்தக்குடி நியாயவிலைக் கடையை ஆய்வு செய்து பொதுமக்களிடம் குறைகளை கேட்டறிந்தார்.



சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்தில் மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் பணியினை ஆய்வு செய்தார். உடன் அலுவலர்கள் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டம், கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு வளர்ச்சித் திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.க.லதா,இ.ஆ.ப.,அவர்கள் ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வில் கண்ணங்குடி ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட சித்தானூர் ஊராட்சியில் சித்தானூர் பிரதானச் சாலையிலிருந்து குறிச்சிவயல் வரை செல்லும் புதிய தார் சாலை அமைக்கும் பணியினை நேரடியாக ஆய்வு செய்து பருவமழை காலம் தொடங்கவுள்ளதால் சாலை அமைக்கும் பணியினை விரைவாக நல்லமுறையில் குறிப்பிட்ட காலத்திற்குள் அமைத்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இதனைத் தொடர்ந்து, கண்ணங்குடி வட்டார வேளாண்மை விரிக்க மையம், ஊராட்சி ஒன்றிய மரக்கன்றுகள் உற்பத்தி செய்யும் மையம், அனுமந்தக்குடி நியாயவிலைக் கடை, கண்ணங்குடி தொடக்கப் பள்ளி சத்துணவு மையம், ஆரம்பச் சுகாதார நிலையம் ஆகிய இடங்களில் ஆய்வினை மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.காஞ்சனா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், சிவகங்கை.